நாணயச் சபை
இலங்கை மத்திய வங்கி

2022 சனவரி 28 நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2022இன் 01ஆம் இலக்கம்

## தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல்

**1. சட்ட ஏற்பாடுகள்**

1.1 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கமைவாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் மீதான இத்தகைய பணிப்புரைகளை இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை இத்தால் விடுக்கின்றது.

**2. பணிப்புரைகளின் குறிக்கோள்கள்**

2.1 முகவர்களிற்கும் மூன்றாம் தரப்பினர்களுக்குமான புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பவியலை பின்பற்றுவதுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளானது இடர்நேர்வு முகாமைத்துவத்திற்குள் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தொழில்நுட்பவியல் இடர்நேர்வைப் பின்பற்றியது. இத்தகைய பணிப்புரைகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் புத்துயிரளித்தல் மீதான குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளை அமைப்பதற்கு உத்தேசிக்கின்றன.

**3 ஏற்புடைத்தன்மை**

3.1 முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் மூலம் செயலாற்றப்படும் தொழிற்பாடுகள் உள்ளடங்கலாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஒட்டுமொத்த தொழிற்பாடுகளுக்கு இத்தகைய கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகள் ஏற்புடையாதல் வேண்டும்.

3.2 இத்தகைய பணிப்புரைகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடைமுறைப்படுத்தும் அளவானது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பவியல்களின் இடர்நேர்வு மற்றும் சிக்கல்களின் மட்டத்துடன் பொருத்தமாதல் வேண்டும். குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை தாண்டிச்செல்லுமிடத்து அவை பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

3.3 இத்தகைய பணிப்புரைகளின் ஏற்பாடுகள் 10ஆம் இலக்க பணிப்புரைகளிலுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கு உட்பட்டு 2023.01.01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**4 தொழில்நுட்பவியல் இடர்நேர்வு ஆளுகை மற்றும் மேற்பார்வை**

4.1 **பணிப்பாளர் சபையின் வகிபாகம்**

அ) தொழில்நுட்பவியல், வியாபார உத்தி மற்றும் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பவற்றின் மூலம் ஏற்படுத்தப்படும் சாத்தியமான இடர்நேர்வுகளுடன் இணைகின்ற

தகவல் தொழில்நுட்பவியலையும் சைபர் பாதுகாப்பு உபாயத்தையும் வடிவமைப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

ஆ) நன்கு எழுதப்பட்ட தகவல் பாதுகாப்பு கொள்கை, பொருத்தமான சபை மேற்பார்வையுடன் ஆற்றல்வாய்ந்ததும் வலுமிக்கதுமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு, போதுமான தொழில்நுட்பவியல் வளங்கள், விடயம் மற்றும் சுயாதீனமான கணக்காய்வு என்பவற்றைக் கட்டியெழுப்பும் விழிப்புணர்விற்காக நிறுவன ரீதியான ஒருங்கேற்பாடு என்பன உள்ளடங்கலாக சபை மூலம் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகளால் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சைபர் பாதுகாப்பு உத்தி ஆதரவளிக்கப்பட வேண்டும்.

இ) கிளவுட் பணிகள் மற்றும் நிதியியல் தொழிலநுட்பம் என்பவற்றின் பயன்பாட்டிலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகள் உள்ளடங்கலாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சைபர் இடர்நேர்வுகளை நோக்காகக் கொண்டு மதிப்பிடப்பட வேண்டிய மூன்றாம் தரப்பினர் மற்றும் முகவர்கள் ஆகியோருடனான ஈடுபாடு.

ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் பாதுகாப்பிற்கும் தொழில்நுட்பவியல் புத்துயிரளித்தலுக்கும் பொறுப்பாகவுள்ள சபை மட்ட தகவல் பாதுகாப்பு குழுவொன்றை தாபிப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

உ) தொழில்நுட்பவியல் இடர்நேர்வு மற்றும் புத்துயிரளித்தல் பணிப்புரையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்கு போதுமான மேற்பார்வை வழிமுறைகளை பணிப்பாளர் சபை தாபித்தல் வேண்டும்

**4.2 தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம்**

அ) தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் கவனமானது அடையாளப்படுத்தல், பாதுகாப்பு, கண்டறிதல், பதிலிறுப்பு மற்றும் மீட்புத் தொழிற்பாடுகள் என்பனவற்றில் பரந்துபட்டு காணப்படுதல் வேண்டும். தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவமானது போதுமை, செயற்றிறன் வாய்ந்ததும் பொருத்தபாடுமிக்கதுமான கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்வதுடன் அதையொத்த கால இடைவெளிகளை கண்காணிக்கின்ற அதேவேளை ஏதேனும் இணங்காமையான

பிரதான அவதானிப்புக்கள் தொடர்பில் சபைக்கு தொடர்ந்தும் அறிவித்தல் வேண்டும்.

ஆ) பின்வருகின்ற தொழிற்பாடுகளுடன் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை தாபித்தல்

i) இடர்நேர்வை அடையாளப்படுத்தல்

முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்பினர் ஆகியோர் மூலம் பேணப்படுகின்ற அல்லது ஆதரவளிக்கப்படுகின்ற தகவல் முறைமைகள் உள்ளடங்கலாக தகவல் தொழில்நுட்பவியல் சூழலுக்கு ஏற்புடைத்தான அச்சுறுத்தல்களையும் பாதிக்கப்படும் தன்மைகளையும் அடையாளம் காணுதல்.

ii) இடர்நேர்வு மதிப்பீடு

ஒட்டுமொத்த வியாபாரம் மற்றும் தொழிற்பாடுகள் என்பவற்றின்தகவல் தொழில்நுட்பவியல் அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிக்கப்படும் தன்மைகளின் சாத்தியமான தாக்கம்/விளைவுகள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றிய பகுப்பாய்வொன்றைச் செயலாற்றுதல். இடர்நேர்வு சூழ்நிலைகளின் சாத்தியக்கூறு மற்றும் தாக்கத்தை அளவிடுவதற்கும் தீர்மானிப்பதற்கும் அளவுகோள்களை அமைத்தல்.

iii) இடர்நேர்வைக் கையாளுதல்

தகவல் முறைமைகளின் முகமுக்கியத்தன்மை மற்றும் இடர்நேர்வு சகிப்புத்தன்மை மட்டம் என்பவற்றுடன் நிலையாக காணப்படும் இடர்நேர்வு தணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தல். தணிப்பு வழிமுறைகளை ஏற்புடைத்தான பின்னர் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டமொன்றிற்கு இடர்நேர்வுகள் குறைக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

iv) இடர்நேர்வை கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளிற்கு எதிராக தகவல் முறைமை கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் தொழிற்பாட்டு வினைத்திறனையும் மதிப்பீடு செய்து கண்காணிப்பதற்கான செயன்முறையொன்றை தாபித்தல்.

4.3. **மூத்த முகாமைத்துவத்தின் வகிபாகம்.**

அ) ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு சகிப்புத்தன்மையுடனும் ஆதரவளிக்கப்பட்ட வினைத்திறனான மேற்பார்வை, அறிக்கையிடல், அதிகரிக்கும் நடைமுறை என்பவற்றுடனும் நிலையாகவுள்ள குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைக்குள் ஒப்புதலளிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் இடநேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதுடன் ஏதேனும் பாதகமான அபிவிருத்திகளை பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்துதல்.

ஆ) தொழில்நுட்பவியல் பின்பற்றுகை, தகவல் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, வெளிகளிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் திரட்சி என்பவை தொடர்பிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சபை மட்ட தகவல் பாதுகாப்பு குழுவிற்கு ஆதரவளிப்பதற்கும் முதன்மை நிறைவேற்று அதிகாரி மூலம் தலைமைப்படுத்தப்படும் முகாமைத்துவ மட்ட தகவல் பாதுகாப்பு குழுவொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கொண்டிருத்தல் வேண்டும். முகாமைத்துவ மட்ட தகவல் பாதுகாப்பு குழுவின் வகிபாங்களும் பொறுப்புக்களும் இணைப்பு Iஇல் வழங்கப்படுகின்றன.

இ) தொடர்ந்து செல்லும் அடிப்படையொன்றில் நிறுவனத்திற்குள்ளேயும் மூன்றாம் தரப்பினர் வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளும் முகவராண்மைக்குள்ளேயும் சைபரின் தூய்மை பேணப்படுகின்றது என்பதை உறுதிசெய்தல். அலுவலர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் மூலம் காலமுறையாக மேற்கொள்ளப்படும் வகிபாகத்தை அடிப்படையாகக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தப்பட வேண்டும்.

ஈ) நேரடி அணுகல், தர்க்க முறையிலான அணுகல், மாற்ற முகாமைத்துவம், இணைப்பு முகாமைத்துவம் மற்றும் கட்டமைப்பு முகாமைத்துவம் பல்வேறு தகவல் பாதுகாப்பு நியமங்களில்/ கட்டமைப்புக்களில் வெளிப்படுத்தலுக்கு அமைவாக சிறந்த நடத்தைகள் என்பவற்றுடன் தொடர்புடைய பொருத்தமான கட்டுப்பாடுகளை தாபிப்பதுடன் தகவல் முறைமைகளின் ஒட்டுமொத்த வாழ்க்கைச் சுழற்சியையும அத்தகைய கட்டுப்பாடுகள் கருத்திற்கொள்ள வேண்டும்.

உ) தகவல் பாதுகாப்பு கட்டுப்பாடுகளின் வினைத்திறனையும் பொருத்தப்பாட்டினையும் மீளாய்வு செய்வதுடன் தேவையான

நிவாரண செயற்றிட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்தல்.

**4.4 முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர்**

அ) தகவல் பாதுகாப்பின் தேவைப்பாடுகள் பற்றிய தலைமைத்துவத்தை வழங்குவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும். பின்வருகின்றவாறான முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரின் முக்கிய பொறுப்புக்கள் :

i) தகவல் பாதுகாப்பு உத்தியை உருவாக்குதல், முகாமை செய்தல் மற்றும் தொழிற்படுத்தல்.

ii) தகவல் பாதுகாப்பு நடத்தைகளை தொடர்ச்சியாக கண்காணித்து மதீப்பீடு செய்தல்.

iii) தகவல் பாதுகாப்பு கணக்காய்வு மற்றும் இடர்நேர்வு மதிப்பீடுகளை செயலாற்றுதல்.

iv) தகவல் பாதுகாப்பு ஒழுங்குமுறைப்படுத்தலுடன் நிறுவனத்தை இணங்குவித்தல்

v) வியாபார தொடர்ச்சித் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

vi) தகவல் பாதுகாப்பு இடர்நேர்வுகள் மற்றும் உத்தி என்பவற்றுடன் தொடர்புடைய பயிற்சியும் விழிப்புணர்வும்.

vii) தகவல் பாதுகாப்பு வரவுசெலவுத்திட்டத்தை முகாமை செய்தல்; அத்துடன்

viii) தகவல் பாதுகாப்பு பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல்.

ஆ) முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர் என்பவர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் மூத்த முகாமைத்துவக் குழுவின் நிறைவேற்று அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

இ) முதன்மை நிறைவேற்று அதிகாரி ஒருவருக்கோ அல்லது முதன்மை நிறைவேற்று அதிகாரியை அறிக்கையிடும் இறுதி மட்டமாகக் கொண்ட பொருத்தமான அறிக்கையிடும் மட்டத்திற்கோ முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர் அறிக்கையிடுதல் வேண்டும்.

ஈ) தகவல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மிதமாக நடைமுறைப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் தொழிற்பாடுகள் என்பவற்றுடன் முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர் ஒருங்கிணைய வேண்டும்.

உ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியால் எதிர்நோக்கப்படும் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் பாதுகாப்பு இடர்நேர்வுகளின் அளவு சிறப்பு முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமிப்பதனை தேவைப்படுத்தவில்லை என்ற தீர்மானத்தினைக் பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்துமிடத்து, முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலராக சமகாலத்தில் தொழிற்படுதவற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தற்போதுள்ள மூத்த முகாமைத்துவக் குழுமத்திலிருந்து அலுவலரொருவரை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நியமிக்கலாம். எவ்வாறெனினும், அத்தகைய அலுவலரொருவர் முதன்மை தகவல் அலுவலர், முதன்மை உள்ளக கணக்காளர், முதன்மை இடர்நேர்வு அலுவலர் அல்லது இணங்குவிப்பு அலுவலர் போன்ற பதவிகள் உட்பட அவர்களின் பொறுப்புக்களுக்கு அடர்நேர்வை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் தொழிற்பாட்டை தொழிற்படுத்தல் ஆகாது.

**4.5 உள்ளகக் கணக்காய்வு**

இத்தகைய பணிப்புரைகளிலுள்ள தேவைப்பாடுகளுடன் குறைந்தபட்சம் ஆண்டு ரீதியில் உள்ளகக் கணக்காய்வினூடாக இணங்குகின்றது என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதி செய்ய வேண்டும்.

**5. தகவல் மற்றும் தகவல் முறைமை பாதுகாப்பு**

**5.1 வாடிக்கையாளர் தரவுகளின் நியாயமானதும் ஒழுக்கவியல் சார்ந்ததுமான பயன்பாடு**

அ) இத்தகைய தரவுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பயன்படுத்துவதற்கு நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய வழிகளில் மாத்திரம் வாடிக்கையாளர் தரவுகள் பயன்படுத்தக்கூடும் என்பதை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் உறுதிசெய்ய வேண்டும்.

ஆ) அனைத்து நேரங்களிலும் வாடிக்கையாளர் தரவுகள் நியாயமானதும் ஒழுக்கவியல் சார்ந்ததுமாக பயன்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதற்காள வினைத்திறனான கொள்கைகளையும் நடைமுறைகளையும் பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்தல் வேண்டும். மேலும், அத்தகைய தரவுகள் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டாலொழிய அவற்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முடிவுறுத்தலாகாது.

இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்டு அதேயொத்த ஒழுங்குவிதிகளுக்கு அவை உட்பட்டிருப்பின், வாடிக்கையாளர் தரவுகளின் நியாயமானதும் ஒழுக்கவியல் சார்ந்ததுமாக பயன்படுத்தல் தொடர்பில்

எதிர்பார்ப்புக்கள் மூலம் பின்பற்றப்படும் நிதியியல் தொழில்நுட்பவியல் உள்ளடங்கலாக வெளியிலிருந்தான விற்பனையாளர்களை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

**5.2 தகவல்களை வகைப்படுத்தி பட்டியலிடல்**

அ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகவல் வகைப்படுத்தல் கொள்கையொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) இலத்திரனியல் ரீதியாக பேணப்படும் அனைத்துத் தரவுகளும் தகவல் பாதுகாப்பு மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பேணப்பட்டு தகவல் வகைப்படுத்தல் கொள்கைக்கு அமைவாக ஒதுக்கப்பட்ட வகைப்படுத்தலுடன் பட்டியலிடல் வேண்டும்.

**5.3 முகமுக்கியமான தகவல் முறைமைகளை அடையாளம் காணுதல்**

அ) அதன் வாடிக்கையாளர்கள் அல்லது இணைதரப்பினர்கள், வியாபாரத் தொழிற்பாடுகள், நிதியியல் நிலைமை, நன்மதிப்பு அல்லது ஏற்புடைத்தான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவித்தல் போன்வற்றிற்கான நிதியியல் பணிகளின் நிதியியல் நிறுவன ஏற்பாடுகளை முறைமையின் தோல்வி பாதிக்குமிடத்து, மிக முக்கியமான உரிமம்பெற்ற நிதிக்கம்பனி நடவடிக்கைகள் அல்லது கொடுப்பனவு பணிகளின் ஏற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்ற ஏதேனும் தகவல் முறைமையை மிகமுக்கியமான தகவல் தொழில்நுட்பவியல் என்பது குறிக்கின்றது.

ஆ) நிதியியல் வியாபாரம் இடையூறில்லமால் கொண்டு நடாத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு கொடுக்கல்வாங்கல் நடைமுறை முறைமைகள், பொது நாளேடு முறைமைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள், விநியோக மார்க்கங்கள், பணம் தூயதாக்கலுக்கெதிராதல்/உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள் நடைமுறைகள் என்பவற்றிற்காக பயன்படுத்தப்படும் முறைமைகள், மற்றும் ஏதேனும் வேறு முறைமை என்பவற்றைக் மிகமுக்கியமான தகவல் முறைமையொன்று கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் வரையறுக்கபடல் ஆகாது. மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து நீக்கப்படுகின்ற ஏதேனும் தகவல் முறைமையும் உள்ளக

ரீதியாக தாபிக்கப்பட்ட கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அனைத்து அத்தகைய விலக்கல்களும் ஆகக்குறைந்தது ஆண்டிற்கு இரு தடவைகள் மீளாய்வுசெய்யப்பட வேண்டும்.

இ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்கள் தொடர்பிலான முகமுக்கியமான தகவல் முறைமையின் வரைவிலக்கணத்திற்குள் அமைகின்ற தகவல் முறைமைகளை பணிப்பாளர் சபை அடையாளங்காணுதல் வேண்டும்.

**5.4 பயன்படுத்துநர் அணுகு முகாமைத்துவம்**

அ) முகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கும் வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்தும் தகவல் முறைமைகளுக்கும் பயன்படுத்துநர் அணுகு கட்டுப்பாடு ஏற்புடையாதல் வேண்டும்.

ஆ) இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர்களின் தரவுகளை வெளிப்படுத்தும் மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்காக மிகமுக்கியமான தகவல் முறைமையுடன் ஒத்தவாறான பயன்னடுத்துநர் கட்டுப்பாடு தேவைப்பாடுகளை பிரயோகிப்பதன் அவசியம் பற்றி பணிப்பாளர் சபையானது ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் ஆலோசனையுடன் தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும்.

இ) சிறப்புரிமையை பெற்ற பயன்படுத்துநர்கள் உள்ளடங்கலாக அனைத்து பயன்படுத்துநர்களையும் முகாமை செய்வதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொழில்துறை நியம பயன்படுத்துநர் அணுகலொன்றையும் அடையாள முகாமைத்துவ முறைமைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

ஈ) தொழில்துறை நியம பயன்படுத்துநர் அணுகு மற்றும் அடையாள முகாமைத்துவ முறைமை (முறைமைகள்) என்பன சாத்தியமற்றதாகவோ அல்லது பொருத்தமற்றதாகவோ காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்குட்பட்டு தற்போதுள்ள ஏதேனும் தகவல் முறைமைக்காக பொருத்தமான கட்டுப்பாடொன்றை நடைமுறைப்படுத்தும் விதத்தில் பதிலீட்டுக் கட்டுப்பாடுகளை உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் பயன்படுத்த முடியும்.

உ) சிறப்புரிமையை பெற்ற பயன்படுத்துநர்கள் அணுகுவசதியை "கொண்டிருப்பது அவசியம்" என்ற அடிப்படையில் மாத்திரமே வழங்க வேண்டும் என்பதுடன் உயர்ந்த மட்ட அணுகு தளம், அத்தகைய அணுகுவசதி தேவைப்படும் போது மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கு வழங்கப்படல் வேண்டும். உரிமம்பெற்ற நிதிக்கம்பனியின் தொடர்ந்து மேற்கொள்ளும் கண்காணிப்பின் ஒரு பகுதியாக இத்தகைய கணக்குகளின் நடவடிக்கைகள் நுழைந்து மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

ஊ) பின்வருகின்ற கால இடைவெளிகளுக்கமைவாக உரிமம்பெற்ற கம்பனிகள் பயன்படுத்துநர் அணுகு மீளாய்வுகளை நடாத்த வேண்டும்.

i) முகமுக்கியமான தகவல் முறைமைகளுக்காக ஆகக்குறைந்தது மாதாந்த அடிப்படையில்.

ii) வாடிக்கையாளர் தரவுகளிற்கும் இரகசியமான வாடிக்கையாளர் அல்லாதவர் தரவுகளிற்கும் வெளிப்படுத்தப்படும் முகமுக்கியமற்ற தகவல் முறைமைகளுக்காக ஆகக்குறைந்தது காலாண்டு அடிப்படையில்.

iii) வேறு அனைத்து தகவல் முறைமைகளுக்காக ஆகக்குறைந்தது வருடாந்த அடிப்படையில்.

iv) இணைக்கப்பட்ட கணக்குகளின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கிணங்க பொருத்தமான முறையியலொன்றினைப் பயன்படுத்தி இலத்திரனியல் விநியோக மார்க்கங்கள் உட்பட உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் ஏதேனும் தகவல் முறைமையினைப் பயன்படுத்துவதற்கு பதிவுசெய்யப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரு தடைவை என்ற அடிப்படையில்.

எ) தகவல் பாதுகாப்பு குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்டதற்கு அமைவாக பயன்படுத்துநர் அணுகு சிறப்புரிமை மீளாய்வுகளை நடாத்துவதற்கு பொருத்தமான முறையியலை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பின்பற்றுதல் வேண்டும்.

ஏ) பயன்படுத்துநர் அணுகு சிறப்புரிமை மீளாய்வுகளை நடாத்தும் போது, மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் போன்ற உள்ளக மற்றும் வெளியக பயன்படுத்துநர்களளை அடையாளங்காணுதல், உறுதிப்படுத்தல் மற்றும் ஆங்கீகரித்தல் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கான பொருத்தமான

பொறிமுறையொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**5.5 கணினிப் பாதுகாப்பு மற்றும் பயன்படுத்துநர் நடவடிக்கை பதிவு முகாமைத்துவம்**

அ) கணினிப் பாதுகாப்பையும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் மற்றும் வாடிக்கையாளர் தரவுத் தகவல் முறைமைகள் என்பவற்றின் பயன்படுத்துநர் நடவடிக்கைப் பதிவையும் முகாமை செய்வதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பதிவு முகாமைத்துவம் ஒன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும். சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் தற்றுணிபில் இத்தகைய கொள்கை வேறு தகவல் முறைமைகளுக்கு நீடிக்கப்படலாம்.

ஆ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையால் கொள்கை ஒப்புதலளிக்கப்பட வேண்டும்

இ) கொள்கையானது பேணப்படவேண்டிய பதிவுகளின் வகைகள், பிடித்துவைத்திருக்கும் காலம், மீளாய்வின் கால இடைவெளி, மீளாய்வு முறை மற்றும் பயன்படுத்துவதற்கான கருவிகள், சம்பவத்தினை அடையாளம் காணுதல் மற்றும் பதிலிறுத்தல் மற்றும் பதிவுகளினைப் பேணுதல் மற்றும் மீளாய்வு செய்வதற்கான பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ஈ) கணனி பாதுகாப்பு பதிவானது பாதுகாப்பு மென்பொருள், தொழிற்பாட்டு முறைமைகள் மற்றும் பிரயோகங்களால் உருவாக்கப்பட்ட பதிவுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பேணப்படுகின்ற பாதுகாப்பு பதிவானது தகவல் பாதுகாப்பு தொடர்பான எதிர்பாரத நிகழ்வுகளை அடையாளம் காணவும் புலனாய்வு செய்யவும் போதுமானதாக இருத்தல் வேண்டும்.

உ) சிறப்புரிமையை பெற்ற பயன்படுத்துநர்களின் பதிவுகளுக்கு மிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் பொருத்தமான கருவிகளையும் முறைகளையும் கொண்டு அண்மைய அதே நேர அடிப்படையொன்றில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

**5.6 தரவு மறைக் குறியாக்கம்**

**5.6.1 வாடிக்கையாளர் தரவு குறியாக்கம்**

அ) வாடிக்கையாளர் தரவு குறியாக்கம் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் என்பவற்றுடன் பேணப்படும் வாடிக்கையாளர் தரவு குறியாக்கம் ஏற்புடையாதல் வேண்டும்.

இ) தரவு குறியாக்கத்தின் மட்டங்கள்

i) **எஞ்சியுள்ள தரவுக் குறியாக்கம்**

வாடிக்கையாளர் தரவானது இறுதியில் தரவுத்தள குறியாக்கம் அல்லது கோப்பு மட்ட மறைக் குறியாக்கம் என்பவற்றிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

ii) **இடைப்போக்கிலுள்ள தரவு குறியாக்கம்**

வாடிக்கையாளர் தரவைக் கொண்ட கோப்பு மாற்றப்படும் போதெல்லாம், இது கோப்பு மட்டத்தில் குறியீடாக்கப்படல் வேண்டும்.

iii) **முடிவுப் புள்ளிச் சாதனங்கள் மற்றும் அகற்றத்தக்க சாதனங்களுக்கான முழுவட்டு குறியாக்கம்**

மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மற்றும் முகவர்களின் முடிவுப்புள்ளிச் சாதனங்களை உள்ளடக்கி ஒன்றில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வாடிக்கையாளர் தரவினை சேமிக்கின்ற அத்தகைய சாதனங்கள் மற்றும் அகற்றத்தக்க சாதனங்கள் முழுமையான வட்டு குறியாக்கத்திற்கு உட்பட்டனவாகும்.

ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொழில்துறை நியம குறியாக்க முறைகளை பயன்படுத்த வேண்டும். அத்தகைய முறைகளின் தெரிவானது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புகள் தொடர்பிலான பணிப்பாளர் சபையின் ஒப்பதலிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

உ) தொழில்துறை நியம குறியாக்க முறைமைகள் சாத்தியமற்றோ அல்லது பொருத்தமற்றோ காணப்படும் போது, சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்கள் தொடர்பிலான பணிப்பாளர் சபையின் ஒப்புதலிற்கு உட்பட்டு வாடிக்கையாளர் பாதுகாப்பு தரவை பாதுகாப்பதற்கு மாற்றுக் கட்டுப்பாடுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பயன்படுத்தலாம்.

**5.6.2 இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவு குறியாக்கம்**

குறியாக்கத் தேவைப்பாடுகள், தரவுக் கசிவு அல்லது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறான குறியாக்கத்தினைத் தடுக்கக்கூடிய வேறேதேனும் மோசமான தகவல் பாதுகாப்பு சம்பவங்களுக்கு உட்பட்டிருக்குமாயின், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு மிகச் சொற்பமான மோசமான தாக்கத்தினை மட்டுமே ஏற்படுத்தக்கூடிய இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவு முறைமைகள் தவிர, இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவுகளுக்கும் பிரயோகித்தல் வேண்டும்.

**5.7 பாதுகாப்புத் தொழிற்பாடுகள் மையம்**

இலத்திரனியல் விநியோக மார்க்கங்களை வழங்குகின்ற அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் இணைப்பு IIஇல் உள்ள குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கு அமைவாக பாதுகாப்புத் தொழிற்பாடுகள் மையத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**5.8 தரவு இழப்பு தடுப்பு**

அ) தரவு கசிவுகளின் இடர்நேர்வைக் குறைப்பதற்கு தொழில்துறை நியம தரவு இழப்பு தடுப்பு கருவிகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும். நடைமுறைப்படுத்தலின் நோக்கெல்லையானது தரவுகளை வெளிப்படுத்தவதற்கு உரிமம்பெற்ற நிதிக்கம்பனி, ஏதேனும் மூன்றாம தரப்பு பணி வழங்குநர்கள் மற்றும் முகவர்கள் அனைத்தையும் உள்ளடக்க வேண்டும்.

ஆ) மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்களைப் பொறுத்தவரையில், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளால் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கமைவாக தரவு இழப்பு தடுப்பை நடைமுறைப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற நிதிக்கள் அவற்றை அனுமதிக்கலாம்.

இ) போதுமான தரவு இழப்பு தடுப்பு வழிமுறைகள் உள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கு மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் மற்றும் முகவர்களால் மேற்கொள்ளப்படும் அத்தகைய நடைமுறைகளின் மீளாய்வை ஆகக்குறைந்தது ஆண்டுரீதியாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடாத்தல் வேண்டும்.

ஈ) தொழில்துறை நியம தரவு இழப்பு தடுப்புக் கருவிகள் சாத்தியமற்றதாகவும் பொருத்தமற்றதாகவும் காணப்படும் போது, சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட பணிப்பாளர்

சபையின் ஒப்புதலுக்குட்பட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வாடிக்கையாளர் தரவை பாதுகாப்பதற்கு மாற்றுக் கட்டுப்பாடுகளை பயன்படுத்த முடியும்.

**5.9 தகவல் பாதுகாப்பு நிகழ்வுப் பதில் மற்றும் மீட்பு**

**5.9.1 தகவல் பதில் திட்டம்.**

அ) நிகழ்வு அதிகரிப்பிற்கான நடைமுறைகள், தீர்வுகாணல், மீட்பு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி ஆர்வலர்களுடன் தொடர்புரையாடல் போன்றவை உள்ளடங்கலாக பணிப்பாளர் சபையால் ஒப்புதலளிக்கப்படும் தகவல் பதில் திட்டத்தை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இற்றைபடுத்திக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) சைபர் பாதுகாப்பு நிகழ்வுகள் தவிர்ந்த தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளின் பொதுவாக அறியப்பட்ட வகைகளை கையாள்வதற்கு குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளை தகவல் பதில் திட்டம் கொண்டிருத்தல் வேண்டும்.

**5.9.2 நிகழ்வுப் பதில் மற்றும் மீட்பு பரீட்சிப்பு**

தகவல் பதில் மற்றும் மீட்பு இயலுமைகளானது, உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நிகழ்வு பதில் ஆயத்த நிலையை தீர்மானிப்பதற்கு இயலுமானவரை உண்மை வாழ்வுடன் நெருங்கிய சூழ்நிலைகளைப் பயன்படுத்தி ஆகக்குறைந்தது ஆண்டுதோறும் பரீட்சிக்கப்படல் வேண்டும். தகவல் பாதுகாப்புக் குழு மூலம் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினூடாக பணிப்பாளர் சபைக்கு அத்தகைய பரீட்சிப்பின் பெறுபேறுகளை அறிக்கையிடுதல் வேண்டும்.

**5.10 தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு**

**5.10.1 நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு**

அ) நோக்கெல்லை

i) மிகமுக்கியமான தகவல் முறைமைகளும் வாடிக்கையாளருக்கு வெளிப்படுத்தப்பட்ட தகவல் முறைமைகளும் நடைமுறைப் படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் தரவிற்கு வெளிப்படுத்தப்படும் ஏதேனும் முகமுக்கியமான தகவல்

முறைமையையோ அல்லது ஏதேனும் தகவல் முறைமையையோ சாத்தியமாக்கக்கூடிய ஏதேனும் வேறு தகவல் முறைமையும் நடைமுறைப் படுத்தலுக்கு பின்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

ii) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு என்பவற்றின் விதந்துரைப்புக்கள் மீதான இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத தரவிற்கு வெளிப்படுத்தப்படும் மிகமுக்கியமல்லா தகவல் முறைமைகளிற்காக நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பை நடாத்துவுதற்கான தேவையை பணிப்பாளர் சபை தீர்மனித்தல் வேண்டும்.

iii) ஆரம்ப நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரும் மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரும் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களை நடாத்துதல் வேண்டும். பணிப்பாளர் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளியேற்றக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, நடைமுறைப் படுத்தலுக்கு முன்னரான தகவல் பாதுகாப்பு பரீட்சிப்புக்களிலிருந்து சிறிதளவான மாற்றங்களை நீக்கக்கூடும்.

ஆ) வழங்கப்பட்ட நடைமுறைப்படுத்தலுக்கு ஏற்புடைத்தவாறு பின்வருகின்ற நடைமுறைப்படுத்தலுக்கு பின்னரான பரிசோனைகளின் வகைகள் கொண்டு நடாத்தப்பட வேண்டும்.

i) ஏதேனும் கேடான அல்லது பாதுகாப்பற்ற கோவையை தீர்மானிப்பதற்கான நிலையான பிரயோக பாதுகாப்பு பரீட்சிப்பு அல்லது மூலக் கோவை மீளாய்வுகள்

ii) தாக்குபவர் பூரணப்படுத்தக்கூடிய பிரயோக மட்ட பாதுகாப்பு பரீட்சிப்பை தீர்மானிப்பதற்கு இயக்கவாற்றல் பிரயோக பாதுகாப்பு பரீட்சிப்பு

iii) உள்ளக கடுமையாக்கமான கொள்கைகளுடன் இணங்குவதை உறுதிசெய்வதற்கு கணனிப்படுத்தல்

மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பு மீதான தரத்தை உறுதிப்படுத்தும் பரீட்சிப்பு

iv) கணனிப்படுத்தல் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பிலுள்ள பாதிக்கப்படும் தன்மைகளை இனங்காண்பதற்கு உட்கட்டமைப்பு பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடு.

இ) தகவல் முறைமையை உருவாக்குதல் மற்றும்/அல்லது நடைமுறைப்படுத்தல் என்பவற்றிற்காக குழுவிற்கு பொறுப்பாவதில் இருந்து சுயாதீனமொன்றால் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புக்கள் நடாத்தப்படல் வேண்டும்.

ஈ) 5.10.1.(ஆ) இற்கு அமைவாக நடைமுறைப்படுத்தலுக்கு முன்னரான பரீட்சிப்புகளை நடாத்துவது சாத்தியமற்றுக் காணப்பட்டால் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் பொருத்தமான மாற்று பாதுகாப்பு மதிப்பீட்டு வழிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

உ) வெளிவாரி விற்பனையாளர்களால் தகவல் முறைமைகள் வழங்கப்படும் சூழ்நிலையில் 5.10.1(ஆ)(i)இற்கு மாற்று வழியொன்றாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் தகவல் முறைமை வழங்குநர் ஆகிய இருவராலும் பரஸ்பரமாக ஏற்றுக்கொள்ளப்படும் மூன்றாம் தரப்பினரொருவரால் வழங்கப்படும் உத்தரவாதத்தின் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் நம்பியிருக்கலாம்.

ஊ) நடைமுறைப்படுத்தலுக்கு பின்னரான தொர்புடைய பரீட்சிப்புக்களுக்கு பின்னர் மூலக் குறியீடு பாதுகாப்பு சூழலுக்கு மாற்றப்பட்ட போது கேடான குறியீடை உறுதிசெய்வதற்கு தொழில்துறை நியம கட்டுப்பாடுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**5.10.2 பாதிக்கப்படும் தன்மைகளை மதிப்பிடல்**

அ) தகவல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு மற்றும் முறைமை மாற்றங்கள் என்பவற்றுக்கான மாற்றம் ஏற்படும் போது, வாடிக்கையாளர் தரவுகளை எடுத்துக்காட்டும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பன குறைந்தபட்சம் ஆண்டிற்கு இரு தடவையாவது பாதிக்கப்படும் தன்மை பற்றிய மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

ஆ) உட்கட்டமைப்பு மற்றும் பிரயோக பாதிக்கப்படும் தன்மைகள் ஆகிய இரண்டிலும் பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

இ) உற்பத்திச் சூழல்களில் பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடுகள் செயலாற்றப்பட வேண்டும்.

ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் உள்ளக தகவல் பாதுகாப்பு அலுவலர் அல்லது வெளியக நிபுணர்கள் என்பவற்றால் பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடுகளை செயலாற்றப்பட வேண்டும்.

உ) அடையாளங்காணப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகள் தகவல் பாதுகாப்பு குழுவினால் குறித்த காலப்பகுதிக்குள் திருத்தப்பட வேண்டும்.

**5.10.3 ஊடுருவல் பரீட்சிப்பு**

அ) பின்வருவனவற்றை தீர்மானிப்பதற்கு சுயாதீன வெளிவாரி நிபுணரொருவரை பயன்படுத்தி ஊடுருவல் பரீட்சிப்பை உமிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடாத்துதல் வேண்டும்.

i) உலகின் உண்மையான தாக்குதல்களை தாங்கிக்கொள்வதற்கு பரீட்சிப்பு செய்யப்படும் தகவல் முறைமைகளின் இயலுமை.

ii) பரீட்சிப்பு செய்யப்பட்ட தகவல் முறைமைகளை வெற்றிகரமாக இணங்கச்செய்வதற்கு தாக்குபவர் நடைமுறைப்படுத்த வேண்டிய நுட்பம் மற்றும் நிலைத்தன்மையின் போதுமான மட்டம்.

iii) அத்தகைய தாக்குதல்களை கண்டறியவும் பொருத்தமான பதிலிறுப்பிற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் பாதுகாப்பு, தொழிற்பாடு மற்றும் தலைமைத்துவப் குழுக்களின் இயலாற்றல்.

iv) எதிர்காலத்தில் அத்தகைய அச்சுறுத்தல்களை தணிப்பதற்கு தேவைப்படும் ஏதேனும் சட்டங்கள்.

ஆ) வாடிக்கையாளர் தரவுகளை வெளிப்படுத்தும் மிகமுக்கியமான தகவல் முறைமைகள், தகவல் முறைமைகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோருடனான வாடிக்கையாளர் தரவுக் களஞ்சியம் என்பன ஆகக்குறைந்தது சுயாதீனமான வெளிவாரி ஊடுருவல் பரீட்சிப்பு நிபுணர்களின் ஊடுருவல் பரீட்சிப்புக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். ஊடுருவல்

பரீட்சிப்பின் நடாத்தல் தொடர்பான எடுத்துக்காட்டும் வழிகாட்டல் ஒன்று இணைப்பு-IIIஇல் வழங்கப்பட்டுள்ளது.

இ) முதிர்வடைகின்றதும் தமது வியாபார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்ற கடுமையான தொழில்நுட்பவியலைக் கொண்டதுமான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஊடுருவல் பரீட்சிப்பின் நீடிப்பொன்றாக சிவப்பு குழு நடவடிக்கைகளை நடாத்தக்கூடும். சிவப்பு குழு நடவடிக்கைகளை எவ்வாறு நடாத்த வேண்டும் என்பது பற்றிய எடுத்துக் காட்டும் வழிகாட்டல் ஒன்று இணைப்பு-IV இல் வழங்கப்படுகின்றன.

## 5.11 தகவல் பாதுகாப்பு பயிற்சி மற்றும் சான்றுபடுத்தல்

### 5.11.1 பணிப்பாளர் சபைக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு

அ) பின்வரும் தேவைப்பாடுகளிற்கமைவாக, பணிப்பாளர் சபைக்கான தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான அனைத்தையுமுள்ளடக்கிய வருடாந்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உள்ளடக்குதல் வேண்டும்.

i) அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நடைமுறைகளின் போதுமை மற்றும் காத்திரமான தன்மைகள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் காத்திரமான மேற்பார்வையினை கொண்டிருப்பதனை இயலுமைப்படுத்துவதே யாகும்.

ii) இவ்வொழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிலுள்ள தேவைப்பாடுகளின் நியதிகளுக்கமைவாக பணிப்பாளர் சபையினதும் பணிப்பாளர் குழுவினதும் பொறுப்புக்கள் அத்துடன் தகவல் பாதுகாப்பு முறைமையுடனும் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துடனும் தொடர்புபட்ட வேறு ஏற்புடைத்தான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவையும் இத்தகைய நிகழச்சித்திட்டம் ஊடாக உள்ளடக்கப்படல் வேண்டும்.

iii) இப்பயிற்சியானது ஆகக்குறைந்தது ஆண்டு தோறும் கட்டமைக்கப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அல்லது ஒவ்வொரு வருடமும் தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவ நிபுணர்கள் மூலம் வழங்கப்படும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட விழிப்புணர்வு தொடர்களை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iv) மேற்குறிப்பிட்ட பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டம் மீதான தேவைப்பாடுகள் பணிப்பாளர் சபையுடன் இணங்கப்படுகின்றதா என்பதை சபைச் செயாலாளர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**5.11.2 அலுவலர்களுக்கான தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி மற்றும் சான்றுபடுத்தல் தேவைப்பாடுகள்**

அ) உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோர் மிக முக்கியமான தகவல் முறைமைகளுக்கு உள்ளாகின்ற அல்லது உள்ளாகக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதனையும் அத்துடன் வாடிக்கையாளர் தரவு அல்லது இரகசியமான வாடிக்கையாளர் அல்லாத் தரவுகளில் பயிற்சியளிக்கப்படுவதனையும் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்க தகவல் பாதுகாப்பில் சான்றுபடுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

i) தகவல் பாதுகாப்பு கொள்கை மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் நடைமுறைகள் என்பனவற்றின் அடிப்படையில் தேவைப்படுத்தப்பட்ட ஆட்கள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவுசெய்தல் வேண்டும்.

ii) 5.11.2(i)(அ) இன்படி, அத்தகைய நிகழ்ச்சித்திட்டமானது பயிற்சிபெறுபவரின் தகவல் பாதுகாப்புப் பொறுப்புக்களுக்கு ஏற்ற விதத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் நிதிக்கம்பனியின் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள் எப்பொழுதெல்லாம்

இற்றைப்படுத்தப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் இவையும் கிரமமான முறையில் இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

iii) தேவைப்படுத்தப்பட்ட ஆட்கள் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட உள்ளகச் சான்றிதழ் வழங்கும் பரீட்சையை குறைந்தபட்சம் ஆண்டு தோறுமாவது நிறைவுசெய்தல் வேண்டும்.

ஆ) முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரினால் போதுமானளவு விழிப்புணர்வு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுமிடத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளர் சபை அத்தகைய முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்பு பணி வழங்குவோரின் அலுவலர்களுக்கு 5.11.2(i) இன் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்.

**6. தகவல் முறைமையின் கிடைப்பனவு மற்றும் அனர்த்த மீட்பு**

6.1 **செயற்பரப்பு**

6.2 இலிருந்து 6.5 வரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை மிகமுக்கியமான தகவல் முறைமைகளுக்கு பிரயோகித்தல் வேண்டும்.

6.2 **முறைமை கிடைக்கும்தன்மை**

அ) மிகமுக்கியமான தகவல் முறைமைகள், உயர்ந்த மட்டத்திலான முறைமைகளின் கிடைப்பனவினைப்பெற்றுக்கொள்கின்றன என்பதனை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஆ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் விதந்துரைப்பின் அடிப்படையில் பணிப்பாளர் சபை ஒவ்வொரு மிக முக்கியமான தகவல் முறைமைகளுக்குமாக முறைமைக் கிடைப்பனவு இலக்குகளை நிறுவுதல் வேண்டும்.

இ) சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, மிகமுக்கியமான தகவல் முறைமைகளின் முறைமைக் கிடைப்பனவு இலக்குகளின் சாதனங்கள் கண்காணிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**6.3 அனர்த்த மீட்பு ஏற்பாடுகள்**

அ) பின்வரும் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் விதந்துரைப்புக்களின் மீது பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட மீட்பு நேரக்

குறிக்கோள்கள் மற்றும் அனர்த்த மீட்பு நிலைய குறிக்கோள்களுடன் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் இணங்கியொழுவதற்கான அனர்த்த மீட்பு ஏற்பாடுகளை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

i) உரிமம்பெற்ற நிதக் கம்பனிகளின் மிகமுக்கியமான தகவல் முறைமைகள் 6 மணித்தியாலங்களுக்கும் குறைவான மீட்பு நேரக் குறிக்கோள்களையும் கொண்டிருத்தல்; அத்துடன்

ii) பூஜ்யத்தினை அல்லது கிட்டிய பூஜ்யத்தினைக் கொண்ட மீட்பு நேரக் குறிக்கோள்கள் (அதாவது அனர்த்தத்தின் போது தரவு இழப்பு ஏற்படாமை)

### 6.4 அனர்த்த மீட்பினைச் செயற்படுத்தல்

அ) பணிப்பாளர் சபையானது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்புக் குழு என்பனவற்றின் விதந்துரைப்புக்களினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மிகமுக்கியமான தகவல் முறைமைக்குமாக அனர்த்த மீட்பு நடவடிக்கைகளை உந்தும் செயற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும்.

ஆ) அத்தகைய நடவடிக்கை செயற்பாடுகள் 6.3இல் குறித்துரைக்கப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள் இலக்குடன் இசைந்துசெல்லும் விதத்தில் அனர்த்த மீட்பு ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குப் போதுமான நேரத்தினைக் கொண்டிருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

### 6.5 அனர்த்த மீட்புப் பரீட்சிப்பு

அ) அனர்த்த மீட்பு உட்கட்டமைப்பின் ஏற்பாடுகளை அனைத்து மிகமுக்கியமான தகவல் முறைமைகளையும் பயன்படுத்தி, குறைந்தபட்சம் ஆண்டிற்கொருதடவை 7 நாட்கள் அல்லது அதற்கும் கூடுதலான காலப்பகுதிக்கு பரீட்சித்தல் வேண்டும்.

ஆ) 6.5(அ) இன்படி, அனர்த்த மீட்பு உட்கட்டமைப்பின் பரீட்சிப்பிற்குப் புறம்பாக, அனர்த்த மீட்பு உருப் போலிகளின் வருடாந்த சுழற்சி, தேவைப்படுத்தப்பட்ட மீட்பு நேரக் குறிக்கோள் மற்றும் மீட்பு மையக் குறிக்கோளை எய்துவதற்கு, உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வேறுபட்ட அனர்த்த சூழல்களின் கீழ் இயலாற்றலைத் தீர்மானிப்பதற்காக, பணிப்பாளர் சபை நடைமுறைப்படுத்துவதற்கு இயலக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதுடன் அவசியமானவிடத்து தேவையான சீர்செய்யும் வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | **அலுவலர் தகைமைத் தேவைப்பாடுகள்** | 7.1 | அ) | தகவல் பாதுகாப்பு, தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளில் தேவைப்படுகின்ற தகைமையுடன் அலுவலர்கள் தொழில்புரிகின்றனர் என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களின் ஊழியர் அங்கத்தவர்களும் இத்தகைய தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட வகிபாகத்திற்கான அங்கிகரிக்கப்பட்ட தகைமைகளுடன் தொடர்புடைய எடுத்துக் காட்டும் வழிகாட்டலும் இணைப்பு – V இல் வழங்கப்படுகின்றன. |
| | | | ஆ) | 7.1 (அ) ஆம் பிரிவில் உள்ள தேவைப்பாடுகளுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனி இணங்கவியலாத சூழ்நிலையில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழுவின் விதந்துரைப்புகளுக்குட்பட்டு தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் இடர்நேர்வு முகாமைத்துவத்திலுள்ள பொருத்தமான அனுபவம் மற்றும் திறன்களுக்காக எடுத்துக்காட்டும் தகைமைகளை மாற்றுவதற்கு தீர்மானித்தல் வேண்டும். |
| 8 | **மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர் முகாமைத்துவம்** | **8.1** | முகமுக்கியமான தொழில்நுட்பவியல் தொழிற்பாடுகள் மற்றும் முறைமைகளுக்காக மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களில் ஈடுபடும் போது பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் வினைத்திறனான மேற்பார்வையை நடைமுறைப்படுத்துவதுடன் ஒருங்கிணைப்பட்ட இடர்நேர்வுகளை தீர்த்தல் வேண்டும். ஈடுபாடு சுயாதீன மதிப்பீடுகளுக்கான ஈடுபாடுகள் உட்பட மூன்றாம் தரப்பினரின் பணி வழங்குநர்கள், தொழிற்பாடுகள் மற்றும் தொழில்நுட்பவியல் முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மைக்கான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் துன்மைப் வகைகூறல்களையும் பொறுப்புகளையும் எந்த வகையிலும் குறைக்கவோ அல்லது அகற்றலாகாது. | |
| | | **8.2** | மூன்றாம் தரப்பினர் வழங்குநர் மூலம் ஏதேனும் வாடிக்கையாளர் தரவு இரகசியத்தன்மை மீறல்களுக்காக பணிப்பாளர் சபை பொறுப்புடையதாதல் வேண்டும். | |
| | | **8.3** | **மூன்றாம் தரப்பினர் பணி வழங்கல் மதிப்பீடு** | |
| | | | அ) | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் தனது பணிகளுக்கு ஈடுபடுவதன் முன்னர் மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களின் தேர்ச்சி, முறைமை உட்கட்டமைப்பு மற்றும் நிதியியல் ஆற்றல் என்பனவை மீது முறையான உரிய விழிப்புக் கவனத்தை நடாத்துதல் வேண்டும். |

ஆ) இதற்கு மேலதிகமாக, பின்வரும் குறிப்பிட்ட இடர்நேர்வுகளை முகாமை செய்வதிலுள்ள மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களின் இயலாற்றல்கள் தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

i) வாடிக்கையாளரின் அதிகாரமில்லாத வெளிப்படுத்துகை மற்றும் எதிர்தரப்பினர் தகவல்கள் உள்ளடங்கலாக தரவுக் கசிவு.

ii) இயலாற்றல் செயலாற்றம் உள்ளடங்கலாக பணி இடையூறு

iii) செயன்முறைப்படுத்தல் வழுக்கள்

iv) நேரடி பாதுகாப்பு மீறல்கள்

v) சைபர் அச்சுறுத்தல்கள்

vi) முக்கிய ஆளணி மீதான அதீத நம்பிக்கை

vii) தகவலை மாற்றம் செய்தல், செயன்முறைப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்தல் போன்றவற்றை மேற்கொள்கையில் நிதியியல் நிறுவனத்துடன் அல்லது அதன் வாடிக்கையாளருடன் தொடர்புடைய இரகசிய தகவலை தவறாகப் பயன்படுத்துதல்.

vii) திரட்சி இடர்நேர்வு

இ) 8.3 (ஆ) இல் எடுத்தக்காட்டப்பட்ட இடர்நேர்வுகளை மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர் வெளிக்காட்டுகின்ற சூழ்நிலையில், உரிமம்பெற்ற நிதிக்கம்பனி அத்தகைய இடர்நேர்வுகளை தணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்வைக்கபட்டுள்ளன என்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**8.4 பணி மட்ட உடன்படிக்கைகள்**

அ) மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்களுடன் ஈடுபடும் போது பணி மட்ட உடன்படிக்கையொன்றை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் தாபித்தல் வேண்டும். குறைந்தபட்சத்தில் பின்வருவனவற்றை பணி மட்ட உடன்படிக்கை கொண்டிருத்தல் வேண்டும்.

i) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் ஏதேனும் நிறுவனத்தை அல்லது நிறுவனத்தை பரீட்சிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியால் நியமிக்கப்பட்ட ஏதேனும் தரப்பினர்களுக்கான அணுகும் உரிமைகள். முகாமைத்துவ தகவல்கள் மற்றும் அனைத்து ஆலோசனையானதும் தீர்மானமெடுத்தல் செயன்முறையினதும் அறிக்கைகள் உள்ளடங்கலாக

உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் ஏதேனும் பதிவை, கோப்பை அல்லது தரவை இவை உள்ளடக்க வேண்டும்.

ii) மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர் மற்றும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிக்கான பணிகளை வழங்குவதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட அதன் அலுவலர்கள் போன்றோரை பரீட்சிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் உரிமைகள்.

iii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு வழங்கப்பட்ட பணிகளை கருத்திற்கொண்டு பணிப்பாளர் மூலம் கோரப்படும் ஏதேனும் தகவல் அல்லது தரவை கிடைப்பனவாகச் செய்வதற்கான மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்.

iv) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியால் வழங்கப்படும் பணிகளுடன் தொடர்புடைய ஏதேனும் தகவல் அல்லது தரவைக் கோருவதற்கும் பெறுவதற்கும் இலங்கை நீதித்துறையின் உரிமைகள்.

v) நியாயமாகவும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனியால் பகிரப்படும் தரவிற்காகவும் பயன்படுத்தக்கூடிய வாடிக்கையாளர் தரவை மூன்றாம் தரப்பினர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

vi) மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநருக்கு கிடைப்பனவாகவுள்ள அனைத்து வாடிக்கையாளர் தரவுகளும் இரகசியமான வாடிக்கையாளரல்லாத தரவுகளும் ஒப்பந்த இறுதி காலப்பகுதியில் முன்ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்தில் நிரந்தரமாக அழிக்கப்படல வேண்டும்.

vii) இத்தகைய பணிப்புரைகளில் வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் தேவைப்பாடுகளுக்கும் தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு தேவைப்பாடுகளுக்கும் வசதியளிப்பதற்கான மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர்கள்.

viii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கான போதுமான முன்னைய அறிவித்தலை வழங்குவதற்கு பணி வழங்குநருக்கும் ஏதேனும் துணை ஒப்பந்ததாரருக்குமான தேவைப்பாடுகள்.

ix) தொடர்புடைய சட்டவாக்கங்களின் கீழ் இரகசிய ஏற்பாடுகளுடன் இணங்குவித்தல் மீதான பணி வழங்குநரால் மேற்கொள்ளப்பட்ட எழுத்தாவணம் ஒன்று. ஈடுபாடு முடிவடைந்த பின்னர் கூட ஒப்பந்தத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட இரகசிய ஏற்பாடுகளால் எல்லைப்படுத்தப்பட வேண்டிய பணி வழங்குநருக்காக

மேலும் தெளிவாக பணி மட்ட உடன்படிக்கை வழங்கப்படும்.

x) அனர்த்த மீட்பு மற்றும் பின்னூட்டல் இயலுமைக்கான ஏற்பாடு.

xi) மூன்றாம் தப்பினரால் நியமிக்கப்பட்ட அலுவலா் இடையூறில்லாத பணியை வழங்குதற்கும் அத்தகைய மாற்றங்களின் போதுமான அறிவித்தல்களை வழங்குவதற்கும் அா்பணித்துள்ளாா் என்பதை உறுதிபடுத்தவும்.

xii) மூன்றாம் தரப்பு பணி வழங்குநா் மூலம் ஏதேனும் வாடிக்கையாளா் தரவு இரகசியத்தன்மை மீறல்களுக்கான ஈடுசெய்யும் பொறிமுறை மற்றும் சரிபாா்க்கும் நடைமுறை.

xiii) மிகமுக்கியமான முறைமையின் கிடைப்பனவு

xiv) பணி வழங்குநரை வெளியேற்றுவதில் அல்லது இடைநிறுத்தவதில் வியாபார தொடா்ச்சியைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள்.

ஆ) மூன்றாம் தரப்பினா் ஏற்பாட்டின் தன்மையினதும் இடையூறினதும் காரணமாக பணி மட்ட உடன்படிக்கையில் 8.4(அ) இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனி ஒருங்கிணைப்பதற்கு இயலாமல் உள்ள சூழ்நிலையில், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடா்நோ்வு முகாமைத்துவக் குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழுவின் விதந்துரைப்புடன் பணி மட்ட உடன்படிக்கையிலிருந்து அத்தகைய விலக்குதல்களை பணிப்பாளா் சபை தீா்த்தல் வேண்டும்.

**8.5** வழங்கப்பட்ட பணிகளுடன் தொடா்புடைய அண்மைய பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திகளை கருத்திற்கொள்வதற்கு மூன்றாம் தரப்பினா் பணி வழங்குநா்களுடன் பணி மட்ட உடன்படிக்கை கிரமமாக மீளாய்வு செய்வதற்கான அதன் இயலுமையை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதி செய்தல் வேண்டும்.

**8.6** இப்பணிப்புரைகளில் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து தொடா்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அதன் மூன்றாம் தரப்பினா் பணி வழங்குநா்கள் இணங்கியொழுகுவதை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

**8.7** மூன்றாம் தரப்பினா் பணி வழங்குநா்களால் வழங்கப்பட்ட தரவுகளும் காலமுறையாக மீளப்படக்கூடியவை என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும். சைபா் நிகழ்வொன்று ஏற்படும் போது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கான காலமுறையான இற்றறைப்படுத்தல்கள் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல்

நிலைப்பாடுகள் அத்துடன் உரிமம்பெற்ற நிதிக்கம்பனியின் உடனடி அறிவித்தல்களுக்கு வசதியளிப்பதற்கு மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநருடனான தெளிவாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் நடைமுறைபடுத்தப்படுகின்றன என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

8.8 தனது தகவல் சேகரிப்பானது ஆகக்குறைந்தது மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநரின் வேறு வாடிக்கையாளர்களிடமிருந்து தர்க்கரீதியாக பிரிக்கப்பட்டது என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதி செய்தல் வேண்டும். அதிகாரமற்ற பயன்படுத்துநர்களுக்கு வழங்கப்பட்ட அணுகளிற்கு முறையான கட்டுப்பாடுகளும் காலாந்தர மீளாய்வுகளும் நடைமுறைப்படுத்தபட வேண்டும்.

8.9 மூன்றாம் தரப்பினர் பணி வழங்குநர் மூலம் மேற்கொள்ளப்படும் ஏதேனும் தவறான அல்லது திருப்திகரமற்ற செயலாற்றம் நிகழ்கையில் வலுவாக மீள்வதற்கும் மீண்டும் தொடர்வதற்குமான இயலாற்றல் மற்றும் ஒழுங்கான வெளியேற்றத்தை வசதியளிப்பதற்கான ஏற்பாடுகள் என்பவற்றை மூன்றாம் தப்பினர் பணி வழங்குநர்களால் தொகுக்கப்படும் ஏதேனும் முக்கியத்துவமான முறைமை கொண்டுள்ளன என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதி செய்தல் வேண்டும்.

**9 கிளவுட் பணிகள்**

9.1 இணையதளம் முழுவதும் பல்புடையான வாடிக்கையாளர்கள் ஊடாக வளங்கள் மற்றும் பணிகளை பகிர்தல் தொடர்பிலான வெளிநாட்டு செலாவணிகளை கொண்ட கிளவுட் பணிகளின் உள்ளாந்த கட்டமைப்பைக் கருத்திற்கொண்டு கிளவுட் பணிகளை பின்பற்றுவதில் உள்ள உள்ளார்ந்த இடர்நேர்வை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் முழுமையாக புரிந்துணர வேண்டும்.

9.2 **அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு மதிப்பீடு**

அ) இடர்நேர்வை பின்பற்றுவதற்கு முன்னர் இடர்நேர்வு மதிப்பீடொன்றை உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் நடாத்துதல் வேண்டும்.

i) வரிசைப்படுத்தல் மாதிரியின் நுட்பம்.

ii) தற்போதுள்ள முறைமைகளை கிளவுட் உட்கட்டமைப்பிற்கு மாற்றுதல்.

iii) கிளவுட் உட்கட்டைப்பின் அமைவிடம்.

iv) பல குத்தகை அல்லது தரைவை இணைத்தல்

v) விற்பனையாளர் நுழைவுத்தடை மற்றும் பிரயோகக் கையாண்மை அல்லது இடைக்கையாண்மை

vi) உயர்ந்தளவிலான தரவு மற்றும் தொழில்நுட்பவியல் முறைமை பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு கிளவுட்

உட்கட்டமைப்பின் பாதுகாப்பு கட்டமைப்புக்களை வடிவமைப்பதற்கான இயலுமை

vii) கிளவுட் பணி வழங்குநர்களினூடாக சைபர் தாக்குதல்களை வெளிப்படுத்துதல்.

viii) இடைநிறுத்துவதைத் தொடர்ந்து நிதியியல் நிறுவனத்தின் தரவுகளை பாதுகாப்பதற்கான இயலாற்றல் உள்ளடங்கலாக கிளவுட் பணி வழங்குநர் ஒருவரை இடைநிறுத்தம்செய்தல்.

ix) பொறுப்புக்கள், வரையறைகள் மற்றும் பணி வழங்குநரின் பொறுப்பை சிதைத்தல்.

x) தொடர்ச்சியான அடிப்படையொன்றில் கிளவுட் கணனிப்படுத்தல் தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளையும் பன்னாட்டு நியமங்களையும் முகங்கொடுப்பதற்கான இயலுமை.

ஆ) 9.2 (அ) இல் எடுத்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளை கிளவுட் பணி வழங்குநர் வெளிப்படுத்துகின்ற சூழ்நிலையில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனி அத்தகைய இடர்நேர்வுகளை தணிப்பதற்கான தேவையான நடைமுறைகளை கொண்டுள்ளனர் என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

**9.3** தேர்ந்தெடுக்கப்பட்ட கிளவுட் உள்ளமைப்பு பின்வரும் பண்புக்கூறுகளை எந்த அளவிற்கு போதியளவில் உள்ளன என்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மதிப்பிடுதல் வேண்டும்,

அ) புவியியல்ரீதியான பன்முகப்படுத்தப்பட்ட சேவையகங்கள்

ஆ) உயர்ந்தளவான கிடைப்பனவு

இ) உயர்ந்தமட்ட அளவு

ஈ) பெயர்வுத்திறன்

உ) இயங்கக்கூடிய தன்மை

ஊ) சாத்தியமான இணையத்தள தவறுகளுக்கு எதிராக பாதுகாப்பதற்கான பொருத்தமான மாற்றல் உள்ளக வழி உள்ளடங்கலாக வலுவான மீட்பு மற்றும் மீள ஆரம்பித்தலின் திறன்

**9.4** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைந்தபட்சம் பின்வரும் பகுதிகளில் கிளவுட் பணி வழங்குநர்களின் சுயாதீனமான, பன்னாட்டு அளவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களின் கிடைப்பனவை மதிப்பிடுதல் வேண்டும்:

அ) பயனர் தரவின் குறியாக்கம், மறைகுறியாக்கம் போன்ற கிரிப்டோகிராபிக் தொகுதிகள் உட்பட தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ கட்டமைப்பு.

ஆ) வாடிக்கையாளர் மற்றும் இணைத்தரப்பின் பாதுகாப்பிற்கான கிளவுட் - குறிப்பிட்ட பாதுகாப்பு கட்டுப்பாடுகள் அல்லது பயன்பாட்டிலுள்ள, சேமிப்பிலுள்ள மற்றும் நிலைமாற்றலில் உள்ள கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல் தரவு உள்ளடங்கலான தனியுரிமை தகவல்.

**9.5** உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஏதேனும் கிளவுட் பணிகளைப் பயன்படுத்துவதற்கு முன்னர் முக்கியமான மற்றும் முக்கியமற்ற முறைமைகளை தனித்தனியாக இனங்காணுதல் வேண்டும். பந்தி 9.2இல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கமைவாக இடர்நேர்வு மதிப்பீடானது ஆவணப்படுத்தப்பட்டு பின்பற்றுவதற்கு முன்னர் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

**9.6** அங்கீகரிக்கப்படாத வெளிப்பாடுகள் மற்றும் அணுகலுக்கு எதிராகப் பாதுகாப்பதற்கு கிளவுட் பணிகளைப் பயன்படுத்தும்போது, வாடிக்கையாளர் மற்றும் இணைத்தரப்பினர் தகவல் மற்றும் தனியுரிமைத் தரவு ஆகியவற்றில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பொருத்தமான பாதுகாப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும். தொடர்புடைய கிரிப்டோகிராபிக் முக்கிய முகாமைத்துவம் உள்ளடங்கலாக வாடிக்கையாளர் மற்றும் இணைத்தரப்பினர் தகவல், தனியுரிமை தரவு மற்றும் கிளவுட்டில் தரப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடைய அனைத்து தரவுகளினதும் தக்கவைக்கின்ற உடைமை, கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றை இது உள்ளடக்குதல் வேண்டும்.

**10 நிலைமாறுகால ஏற்பாடுகள்**

**10.1** கீழே அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளதற்கமைவாக பணிப்புரை மீதான நிலைமாறு கால ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

**அட்டவணை 1: இணக்கத்திற்கான காலகெடுக்கள்**

| தொடர்பு | தேவைப்பாடு | இணக்கத் திற்கான திகதி |
|---|---|---|
| 4.3(ஆ) | நிறைவேற்று மட்டத்திலான தகவல் பாதுகாப்பு குழு | 2023.07.01 |
| 4.4 | தலைமை பாதுகாப்பு அலுவலரை நியமித்தல் | 2025.01.01 |
| 5.2 | தகவல் வகைப்படுத்தல் மற்றும் பட்டியலிடல் | 2023.07.01 |
| 5.3 | முக்கிய தகவல் முறைமைகளை இனங்காணுதல் | 2023.07.01 |
| 5.4 | பயனர் அணுகல் முகாமைத்துவம் | 2024.01.01 |
| 5.5 | கணினி பாதுகாப்பு மற்றும் பயனர் பதிவு முகாமைத்துவம் | 2024.01.01 |

| | | |
|---|---|---|
| 5.6 | தரவு குறியாக்கம் | 2024.01.01 |
| 5.7 | பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையம் | 2026.01.01 |
| 5.8 | தரவு இழப்பை தடுத்தல் | 2024.01.01 |
| 5.9 | தகவல் பாதுகாப்பு நிகழ்வு பதில் மற்றும் மீட்பு | 2024.01.01 |
| 5.10.2<br>5.10.3 | தகவல் பாதுகாப்பு பரீட்சிப்பு<br>அ)பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகள்<br>ஆ)ஊடுருவல் பரீட்சிப்பு | 2024.01.01<br>2024.01.01 |
| 5.11.1<br>5.11.2 | தகவல் பாதுகாப்பு பயிற்சி மற்றும் உறுதிப்படுத்தல்<br>அ) பணிப்பாளர் சபைக்கான பயிற்சியும் விழிப்புணர்வும்<br>ஆ) தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி மற்றும் ஊழியருக்கான உறுதிப்படுத்தல் தேவைப்பாடு | 2023.07.01<br>2023.07.01 |
| 6.2 | முறைமை கிடைப்பனவு | 2023.07.01 |
| 6.3/6.4/6.5 | அனர்த்த மீட்பு | 2023.07.01 |

**11 வரைவிலக்கணங்கள்**

11.1 பின்வரும் வரைவிலக்கணங்கள் இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக ஏற்புடையதாதல் வேண்டும்.

அ) **'முகவர்'-** முகவர் அல்லது துணை முகவர் என்பது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் சார்பில் மட்டுப்படுத்தப்பட்ட நிதி வியாபார நடவடிக்கைகளை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்படும் உள்ளக கொள்கைகளுக்கமைவாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்று அல்லது ஆளொருவர் எனப் பொருள்படும்.

ஆ) **'இரகசியத்தன்மை வாய்ந்த வாடிக்கையாளர் அல்லாத தரவு'** – வாடிக்கையாளர் தரவின் வரைவிலக்கணத்திற்குள் வராததும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கொடுக்கல்வாங்கல்கள், பணிப்பாளர் குழுவிற்கான சமர்ப்பிப்புகள், முக்கிய பணியாளர் தரவு, மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் தீர்மானிக்கப்பட்டதற்கமைவாக வேறு ஏதேனும் தரவு உள்ளடங்கலாக அவை தீங்கிழைக்கும் வகையில்

பயன்படுத்தப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்றதாயின், குறிப்பிடத்தக்க நிதியியல் அல்லது கீர்த்தி தொடர்பான இழப்பை ஏற்படுத்தும் ஏதேனும் பொது அல்லாத தரவாகும்.

இ) **'வாடிக்கையாளர் தரவு'** – கடந்த, தற்போதுள்ள அல்லது சாத்தியமான வாடிக்கையாளருடன் தொடர்புடைய ஏதேனும் பொது அல்லாத தரவாகும். எனினும், இனங்காணப்படாத வாடிக்கையாளர் தரவு வாடிக்கையாளர் தரவாக கருதப்பட வேண்டியதில்லை.

ஈ) **'இனங்காணப்படாத வாடிக்கையாளர் தரவு'** – தரவு முதலில் யாருடன் தொடர்புடையது என்பதற்கு வாடிக்கையாளரை இனங்காண்பதற்கு தனியாகவோ அல்லது வேறு எந்தத் தரவோடும் பயன்படுத்த முடியாத வேண்டுமென்றே மாற்றப்பட்ட வாடிக்கையாளர் தரவாகும்.

உ) **'பணிப்பாளர்'** என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் எனப்பொருள்படும்.

ஊ) **'பொது தரவு'** – எந்தவொரு தடையுமின்றி பயன்படுத்துவதற்கும் மீள வெளியிடுவதற்கும் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்ககூடிய தரவாகும்.

எ) **'பணி வழங்குநர்'** – 2018ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க அல்லது திருத்தப்பட்டவாறான நிதித் தொழில் சட்டத்திற்கமைவாக (வியாபார தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல்) அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வெளியிலிருந்தான ஏற்பாட்டில் ஈடுபட்டுள்ள பணி வழங்குநர் ஆகும்.

ஏ) **'மூத்த முகாமைத்துவம்'** – 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க அல்லது திருத்தப்பட்டவாறான நிதித் தொழில் சட்டப் பணிப்புரையில் (முக்கிய பொறுப்புவாய்ந்த வாய்ந்த ஆட்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல்) தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

**நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

**இணைப்பு I**

## 1. தகவல் பாதுகாப்பு குழு

1.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப தாக்குபிடிக்கும் தன்மைக்காக பொறுப்புவாய்ந்த உச்ச முகாமைத்துவ மட்டத்திலான நிறுவனமாக முகாமைத்துவ மட்டத்திலான தகவல் பாதுகாப்பு குழுவை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நிறுவுதல் வேண்டும். குழுவானது தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மூலோபாய மற்றும் தொழிற்பாட்டு அம்சங்களுக்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

1.2 தகவல் பாதுகாப்பு குழுவானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தலைமை நிறைவேற்று அலுவலரினால் தலைமை தாங்கப்பட வேண்டும்.

1.3 தலைமை தொழிற்பாட்டு அலுவலர்/தொழிற்பாடுகளின் தலைவர், தலைமை தகவல் பாதுகாப்பு அலுவலர், தலைமை தகவல் அலுவலர்/தகவல் தொழில்நுட்பத்தின் தலைவர் மற்றும் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் முகாமையாளர்/பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் தகவல் பாதுகாப்பு குழுவின் ஏனைய பதவிநிலை உறுப்பினர்களாக இருக்க வேண்டும். சட்டத் தலைவர், மனித வள முகாமைத்துவத்தின் தலைவர், மற்றும் பாதுகாப்புத் தலைவர் போன்றோர் தமது பகுதிகள் தொடர்பான விடயம் கலந்துரையாடப்படும் போதெல்லாம் கூட்டிணைந்த உறுப்பினர்களாகக் கலந்துகொள்ள வேண்டும். பணிப்பாளர் சபையின் விருப்பத்தின்படி நிரந்தர உறுப்பினர்களாக அவர்கள் நியமிக்கப்படலாம். இடர்நேர்வு முகாமைத்துவத்தின் தலைவரும் இணக்க அதிகாரியும் தகவல் பாதுகாப்பு குழுவிற்கு நிரந்தர அழைப்பாளர்களாக இருக்க வேண்டும். உள்ளக கணக்காய்வுத் தலைவர் குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையில் தகவல் பாதுகாப்பு தொடர்பில் உள்ளக கணக்காய்வில் கண்டறியப்பட்ட விடயங்களை முன்வைப்பதற்கு அழைக்கப்படுவார்.

1.4 தகவல் பாதுகாப்பு குழுவானது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழு மூலமாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

1.5 தகவல் பாதுகாப்பு குழுவானது இரு மாதங்களுக்கு ஒருமுறையாவது கூடுதல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட ஆகக்குறைந்த உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் நியதிக் குறிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**இணைப்பு II**

**1. பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையம்**

**1.1 பொறுப்புக்கள்**

பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையமானது நாளாந்த தகவல் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்கள் மற்றும் நிகழ்வுகளைத் தடுத்தல், கண்காணித்தல் மற்றும் கண்டறிதல், நிகழ்விற்கான பதிலிறுப்பு, தடயவியல், நிகழ்வை அறிக்கையிடல் மற்றும் அறிவைப் பகிர்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**1.2 அறிக்கையிடல் வழிகள்**

அ) பணிப்பாளர் சபையானது பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்திற்காக பொருத்தமான அறிக்கையிடல் வழியொன்றை நிறுவுதல் வேண்டும்.

ஆ) அத்தகைய அறிக்கையிடல் வழியானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தலைமை தகவல் அலுவலர்/தகவல் தொழில்நுட்பத் தலைவர் மற்றும் தலைமை தகவல் பாதுகாப்பு அலுவலர் ஆகியோர் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் தொழிற்பாடுள் தொடர்பில் தமது பொறுப்புக்களை காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்கு போதியளவான மேற்பர்வையைக் கொண்டிருப்பதை உறுதிசெய்யும் அதேவேளை பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் தொழிற்பாடுகளுக்காக முதன்மை பொறுப்பினை கொண்டுள்ளவரையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

**1.3 தொழிற்பாட்டு நேரங்கள்**

அ) பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையமானது 24 ஓ 7 அடிப்படையில் தொழிற்பட வேண்டும்.

ஆ) நடவடிக்கை மட்டங்களையும் அச்சுறுத்தல் தோற்றப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு நாள்/ வாரத்தின் வெவ்வேறு நேரங்களில் ஊழியர் நிலைகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தீர்மானித்தல் வேண்டும்.

**1.4 மனித வளங்கள், இயந்திர நுண்ணறிவு மற்றும் தன்னியக்கம்**

அ) பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்திலுள்ள ஊழியர் வகிபாகங்களில் குறைந்தபட்சம் பாதுகாப்பு பகுப்பாய்வாளர்கள் (அடுக்கு 1), நிகழ்வு பதிலளிப்பவர்கள் (அடுக்கு 2), பாதுகாப்பு நிபுணர்கள்.ஃஅச்சுறுத்தல் தொடர்பான ஆய்வாளர்கள் (அடுக்கு 3), மற்றும் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் முகாமையாளர் ஆகியோரை உள்ளடக்குதல் வேண்டும்.

ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஒவ்வொரு மட்டத்திலும் தேவைப்படும் சரியான ஊழியர் நிலை மற்றும் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தில் தேவைப்படும் வேறு எந்த வகையான ஊழியர்கள் குறித்தும் நியாயப்பூர்வமான தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்.

இ) பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் முகாமையாளரின் வகிபாகத்தை தவிர, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மேற்குறிப்பிட்ட எவையேனும் வகிபாகங்களுக்காக

மனிதர்களுக்குப் பதிலாக இயந்திர நுண்ணறிவு அல்லது ஏனைய தன்னியக்க தொழில்நுட்பங்களை பயன்படுத்தலாம்.

**1.5 செயன்முறைகள்**

**அ) தெளிவாக வரைவிலக்கியதும் ஆவணப்படுத்தியதுமான செயன்முறைகள்**

பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையமானது நிகழ்வு வகைப்படுத்தல் மற்றும் முன்னுரிமையளித்தல், பகுப்பாய்வு, நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கை, நிகழ்விற்கு பின்னரான மதிப்பீடு மற்றும் தடயவியல் போன்றவற்றுக்காக தெளிவாக வரைவிலக்கியதும் ஆவணப்படுத்தியதுமான செயன்முறைகளை கொண்டிருத்தல் வேண்டும். அச்செயன்முறைகள் பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகளையும் ஒவ்வொரு படிமுறைக்கும் பொறுப்பான ஊழியர்களையும் தெளிவாக இனங்காணுதல் வேண்டும்.

**ஆ) வரையறுத்த அடிப்படை நடவடிக்கை மட்டம்**

சந்தேகத்திற்கிடமான மற்றும் வழமைக்கு மாறான நடவடிக்கைகளை திறம்பட கண்காணிப்பதற்கும் கண்டறிவதற்கும் பயனர்கள், பயன்பாடுகள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு கூறுகளுக்கான அடிப்படை நடவடிக்கை மட்டங்களை பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையம் வரைவிலக்கி இற்றைப்படுத்த வேண்டும். சந்தேகத்திற்கிடமான செயலை சாதாரண நடவடிக்கையிலிருந்து காத்திரமான முறையில் வேறாக்குவதற்கு அடிப்படை நடவடிக்கை நிலைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

**1.6 கருவிகள்**

**அ) கண்காணிப்பு மற்றும் கண்டறிதல் கருவிகள்**

பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையமானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தொழில்நுட்ப பயன்பாட்டின் அளவு மற்றும் சிக்கலான தன்மைக்கேற்ப கண்காணிப்பு மற்றும் கண்டறிதல் கருவிகளைக் கொண்டிருக்க வேண்டும். பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையமானது குறைந்தபட்சம், தன்னியக்க சொத்து கண்டுபிடிப்பு, தரவுத்தள நடவடிக்கை கண்காணிப்பு, பாதிப்பு தொடர்பான மதிப்பீடு மற்றும் ஊடுருவல் கண்டறிதலுக்கான கருவிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**ஆ) பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவ கருவிகள்**

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொழிற்துறை நியமங்களிலான பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவ கருவிகள், பதிவு ஒருங்கிணைப்பு, நிகழ்வு தொடர்பு, நிகழ்வு முகாமைத்துவம், தடயவியல் பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவ அறிக்கையிடல் இயலளவுகொண்ட உதவி முறைமைகளுடன் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தை நிறுவுதல் வேண்டும்.

**இ) தரவு இழப்பை தடுக்கும் கருவிகள்**

**1.7 அச்சுறுத்தல் தொடர்பான தகவல் மற்றும் நுண்ணறிவு**

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இணையத்தின் அடிப்படையில் தோற்றம்பெற்று வரும் அச்சுறுத்தல் முறைமைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்பதுடன் தொடர்புடைய மூலங்களிலிருந்து அச்சுறுத்தல் தகவல் மற்றும் அச்சுறுத்தல் நுண்ணறிவைப் பெறுவதற்கான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பாதுகாப்பு

தொழிற்பாட்டு நிலையங்களின் ஊழியர்கள், செயன்முறைகள் மற்றும் கருவிகள் அத்தகைய ஏற்பாடுகள் கிடைக்கத்தக்க அச்சுறுத்தல் தகவல் மற்றும் பெறப்பட்ட அச்சுறுத்தல் நுண்ணறிவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, பகுப்பாய்வு செய்வதற்கும் தொழிற்படுத்துவதற்குமான திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**1.8 வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளல்**

அ) பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் எந்தவொரு தொழிற்பாட்டையும் மூன்றாம் தரப்பு பணி வழங்குநருக்கு வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானிக்கலாம்.

ஆ) பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலைய செயற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான அனைத்து தீர்மானங்களும் அத்தகைய வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் பணியின் மூலம் ஏற்படும் தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை பணிப்பாளர் சபை மதிப்பீடுசெய்த பின்னர் எடுக்கப்பட வேண்டும். அத்தகைய மதிப்பீடுகள் சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ குழு மற்றும் தகவல் பாதுகாப்பு குழு ஆகியவற்றினால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சுயாதீன மதிப்பீடுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலைய பணிகளின் மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்களுக்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பொது அல்லாத தரவு வெளிப்படும் தரப்படுத்தலுக்கான பன்னாட்டு ஒழுங்கமைப்பு 27001 - தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளின் பிந்திய பதிப்பிற்கான சான்றிதழை, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்திற்காக அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் நிறுவனத்திடமிருந்து உறுதிசெய்தல் வேண்டும்.

ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பொது அல்லாத தரவு வெளிப்படும் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்களினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் பின்னணி சரிபார்ப்புக்களுக்கு உட்பட வேண்டும் அத்துடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியுடன் வெளிப்படுத்தாத உடன்படிக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

உ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் உள்ளக பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையமொன்றாக இருக்குமாயின், பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்தின் மூன்றாம் தரப்பு மற்றும் அவர்களின் ஊழியர்களை பரீட்சிப்பு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் உரிமைகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கும் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலைய பணி வழங்குநருக்கும் இடையிலான ஒப்பந்த உடன்படிக்கைகளினூடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஊ) இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள எந்தவொரு பாதுகாப்பு தொழிற்பாட்டு பணி வழங்குநராலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு வழங்கப்படும் பணிகள் தொடர்பான எந்தவொரு தகவலையும் அல்லது தரவையும் கோருவதற்கும் பெறுவதற்கும் இலங்கை நீதித்துறை மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளின் உரிமைகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலைய

பணி வழங்குநருக்கும் இடையிலான ஒப்பந்த உடன்படிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எ) தலைமை தகவல் பாதுகாப்பு அலுவலர் அல்லது தலைமை தகவல் பாதுகாப்பு அலுவலரின் நேரடி அறிக்கை உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையத்திற்கும் இடையே ஒருங்கிணைப்பதற்கு பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலைய ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட வேண்டும்.

**இணைப்பு III**

**1. சுயாதீனமான வெளிநாட்டு நிபுணர்களினால் மேற்கொள்ளப்படும் ஊடுருவல் பரீட்சிப்பு**

**1.1 குறிக்கோள்**

யதார்த்த உலகின் போக்கிலான தாக்குதல்களை தடுப்பதற்கு பரீட்சிப்பு செய்யப்பட்ட தகவல் முறைமைகளின் திறன்; பரீட்சிப்பு செய்யப்பட்ட தகவல் முறைமைகளை வெற்றிகரமாக உடன்படுவதற்கு தாக்குபவர் பெற்றிருக்க வேண்டிய நுட்பமான நிலை மற்றும் நிலைத்தன்மை; அத்தகைய தாக்குதல்களைக் கண்டறிந்து சரியான முறையில் பதிலளிப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் பாதுகாப்பு, தொழிற்பாட்டு மற்றும் தலைமைக் குழுக்களின் திறன்; அத்துடன் எதிர்காலத்தில் இத்தகைய அச்சுறுத்தல்களைத் தணிப்பதற்கு தேவையான மேம்பாடுகள் ஆகியவற்றை நிர்ணயிப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் சுயாதீன வெளிவாரி நிபுணர்கள் மூலமாக ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்த வேண்டும்.

**1.2 நோக்கெல்லையும் கால இடைவெளியும்**

அ) முக்கியமான தகவல் முறைமைகள், வாடிக்கையாளர் தரவுகளுக்கு வெளிப்படும் தகவல் முறைமைகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனியுடனான வாடிக்கையாளர் தரவின் களஞ்சியங்கள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள் போன்றன குறைந்தபட்சம் ஆண்டுதோறும் சுயாதீன வெளிவாரி ஊடுருவல் பரீட்சிப்பு நிபுணர்களால் ஊடுருவல் பரீசிப்புகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஆ) தகுதிபெறும் முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பணி வழங்குநர்கள், இத்தேவைகளுக்கேற்ப தங்களுடன் தகவல் முறைமைகள் மற்றும் வாடிக்கையாளர் தரவுகளை, ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்துவதற்கு பணிப்பாளர் சபை தேவைப்படுத்தலாம் அத்துடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் நியமிக்கப்பட்ட ஊடுருவல் பரீட்சிப்புக்களின் நோக்கெல்லையில் சேர்க்கப்படுவதற்கு பதிலாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிக்கு அறிக்கையிடலாம். இக்கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கேற்ப ஊடுருவல் பரீட்சிப்பை நடத்துவதற்கு தொடர்புபட்ட முகவர் அல்லது மூன்றாம் தரப்பு பணி வழங்குநர் திறன் கொண்டவர் என்பதைத் நிர்ணயித்த பின்னரும் ஊடுருவல் பரீட்சிப்பின் நோக்கம் அடையப்படுவதை உறுதிசெய்வதற்கு போதியளவான மேற்பார்வை கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்த பின்னரும் பணிப்பாளர் சபை அத்தகைய கோரிக்கையொன்றை முன்வைக்க வேண்டும்.

இ) உண்மை தாக்குதலாளர்கள் பயன்படுத்துவதைப் போன்ற கருவிகள் மற்றும் உத்திகளைப் பயன்படுத்தி ஊடுருவல் பரீட்சிப்புக்கள், உண்மை முறைமைகள் மற்றும் தரவுகளின் மீதான யதார்த்த உலகின் போக்கிலான தாக்குதல்களை உருவகப்படுத்துவதற்கும், அதே தகவல் முறைமைக்குள் அல்லது பல்வகை

தகவல் முறைமைகள் முழுவதும் ஒன்றில் தனித்தனியாகவோ அல்லது ஏனைய பாதிப்புகளுடன் சேர்ந்து வெற்றிகரமாக பயன்படுத்தக்கூடிய பாதிப்புகளை இனங்காண்பதற்கும் பரீட்சிப்பு செய்யப்பட்ட தகவல் முறைமைகளின் பாதுகாப்பு தொடர்பில் உடன்படுவதற்கும் ஊடுருவல் பரீட்சிப்புக்கள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாக இருக்க வேண்டும்.

ஈ) ஊடுருவல் பரீட்சிப்புக்கள் 1.2(உ) மற்றும் 1.8 (இ) ஆகியவற்றுக்கு உட்பட்டு வழமையான வியாபார நிபந்தனைகளின் கீழ் நேரடி/ உற்பத்தி முறைமைகளில் நடத்தப்பட வேண்டும்.

உ) உற்பத்தி முறைமைகளில் ஊடுருவல் பரீட்சிப்புக்களை நடத்துவதற்கு போதுமான முதிர்ச்சியைப் பெறுவதற்காக, உற்பத்தி முறைமைகளுக்குப் பதிலாக, உற்பத்தி முறைமைகளை சிறந்த அளவிற்கு ஒத்திருக்கும் உற்பத்தி அல்லாத முறைமைகளில் ஊடுருவல் பரீட்சிப்புக்களின் முதல் இரு ஆண்டுரீதியான சுழற்சிகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நடத்தலாம். அத்தகைய உற்பத்தி அல்லாத முறைமைகளில் ஊடுருவல் பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டபோதிலும், ஊடுருவல் பரீட்சிப்பின் ஏனைய அனைத்து தேவைகளும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

ஊ) பரீட்சிப்பு செய்யப்பட்ட தகவல் முறைமைகள் அல்லது தரவை ஊடுருவுவதற்கு தாக்குபவரினால் வேண்டப்படும் நுட்பம் மற்றும் நிலைத்தன்மையின் உண்மையான அளவை நிர்ணயிக்கும் பொருட்டு பொதுவாக இருக்கும் தகவல் பாதுகாப்பு நடவடிக்கைகள் எதையும் மாற்றாமல் ஊடுருவல் பரீட்சிப்பு நடத்தப்பட வேண்டும். இருப்பினும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பணிப்பாளர் சபையின் தற்றுணிபில் தனி அல்லது துணை நடவடிக்கைகளாக குறைக்கப்பட்ட தகவல் பாதுகாப்புடன் இந்நடவடிக்கைகளை நடத்தலாம்.

எ) ஊடுருவல் பரீட்சிப்புகள் வெளியக மற்றும் உள்ளக அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் இரண்டையும் உள்ளடக்க வேண்டும்.

ஏ) ஊடுருவல் பரீட்சிப்புகள், மென்பொருள்/பிரயோக பாதிப்புகள் மற்றும் தகவல் முறைமைகளின் செயலாக்கம், வலையமைப்பு மற்றும் சேமிப்பக உட்கட்டமைப்பு ஆகியவற்றில் உள்ள பாதிப்புகள் உள்ளிட்ட தொழில்நுட்ப அடுக்கில் உள்ள பாதிப்புகளைப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்.

ஐ) வாடிக்கையாளர்கள், நிர்வாக மற்றும் செயல்பாட்டு நிலை வியாபாரப் பயனர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு பயனர்கள் உட்பட பல்வேறு பயனர் வகைகளுக்கான உள்நுழைவு சான்றுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனியைப் பயன்படுத்தி கறுப்பு பெட்டி ஊடுருவல் பரீட்சிப்பு மற்றும் சாம்பல் பெட்டி ஊடுருவல் பரீட்சிப்பு இரண்டும் நடத்தப்பட வேண்டும். இருப்பினும், சலுகை பெற்ற பயனர் சான்றுகளைப் பயன்படுத்தி பெற்ற சாம்பல் பெட்டி ஊடுருவல் பரீட்சிப்பானது அவசியமில்லை.

ஒ) ஊடுருவல் பரீட்சிப்புகள், பாதுகாப்பின் மனித அல்லது பௌதீக அடுக்குகளில் இருக்கும் பாதிப்புகளைப் பயன்படுத்த வேண்டியதில்லை.

ஓ) ஒவ்வொரு ஊடுருவல் பரீட்சிப்பின் நடவடிக்கையின் நோக்கெல்லையும் ஊடுருவல் பரீட்சிப்பு நோக்கெல்லை தகவுதிறனொன்றில் வரையறுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

## 1.3 தலைமைக் குழு, செயற்றிட்ட முகாமையாளர் மற்றும் ஒப்பந்தத்தின் குறித்துரைக்கப்பட்ட புள்ளி

அ) ஒவ்வொரு ஆண்டுதோறும் ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையை காத்திரமான முறையில் நடத்துவதற்கு பணிப்பாளர் சபையானது தலைமைக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

ஆ) ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையின் ஒட்டுமொத்த நடத்தைக்கான முழு அதிகாரமும் பொறுப்பும் தலைமைக் குழு கொண்டிருத்தல் வேண்டும்.

இ) 1.1இல் இலக்கை அடையும் விதத்தில் ஊடுருவல் பரீட்சிப்பு நடத்தப்படுவதை தலைமைக் குழு உறுதிசெய்கின்ற அதேவேளை இடர்நேர்வுகளை சரியான முறையில் முகாமைசெய்யப்படுகிறது என்பதை உறுதிசெய்கிறது.

ஈ) தலைமைக் குழு போதுமான வியாபாரம், தொழிற்பாட்டு, தொழில்நுட்பம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

உ) பரீட்சிப்பின் போது முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கு போதுமான அதிகாரத்துடன் தகவல் பாதுகாப்பு குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அவதானிப்பாளர்களிடமிருந்து முன்மதிப்பாக அதிகாரத்தைப் பெற்று, தலைமைக் குழுவானது முக்கியமாக முகாமைத்துவக் குழு உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும். சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் உட்பட வெளிவாரி தரப்பினருக்கு உண்மையான பாதுகாப்பு மீறல்களைத் அறிவிப்பதற்கு பொறுப்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிகழ்வு அதிகரிப்பு சங்கிலியின் மிக உயர்ந்த தீர்மானிப்பாளர்கள் தலைமைக் குழுவின் உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும்.

ஊ) தலைமைக் குழுவானது தலைமை நிறைவேற்று அலுவலருக்கு, முன்மதிப்பாக தலைமை தொழிற்பாட்டு அலுவலர்/தொழிற்பாடுகளின் தலைவர், தலைமை தகவல் அலுவலர்/தகவல் தொழில்நுட்பத்தின் தலைவர், அல்லது தலைமை தகவல் பாதுகாப்பு அலுவலர் ஆகியோருக்கு நேரடியாக அறிக்கையிடுகின்ற தலைமை நிறைவேற்று அலுவலரினால் அல்லது முகாமைத்துவக் குழு உறுப்பினரொருவரினால் தலைமை தாங்கப்பட வேண்டும்.

எ) ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையின் நாளாந்த செயற்றிட்ட முகாமைத்துவத்திற்காக, தலைமைக் குழு அதன் உறுப்பினர்களில் ஒருவரை செயற்றிட்ட முகாமையாளராக நியமித்தல் வேண்டும்.

ஏ) இரு வகிபாகங்களின் முக்கியமான தன்மை காரணமாக தலைவர் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் இருவருக்கும் குறித்துரைக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.

ஐ) முழுத் தீர்மானம் எடுக்கின்ற அதிகாரம் கொண்ட ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குநரின் மூத்த உறுப்பினர் ஒருவர் தலைமைக் குழுவிற்கான குறித்துரைக்கப்பட்ட தொடர்பு புள்ளியாக நியமிக்கப்பட வேண்டும். தலைமைக் குழு அதன் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு அக்குறித்துரைக்கப்பட்ட தொடர்புப் புள்ளியை அழைக்கலாம்.

## 1.4 இடர்நேர்வு முகாமைத்துவம்

அ) ஒவ்வொரு ஆண்டுதோறும் ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கைக்காக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் இடர்நேர்வு நாட்டத்திற்கேற்ப தொடர்புடைய இடர்நேர்வுகள் இனங் காணப்பட்டு, மதிப்பிடப்பட்டு, பேணப்படுவதை உறுதிசெய்வதற்கான பொருத்தமான கட்டுப்பாடுகள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவத் திட்டத்தை தலைமைக் குழு நிறுவுதல் வேண்டும்.

ஆ) இடர்நேர்வு முகாமைத்துவத் திட்டமானது பணி மறுப்பு நிகழ்வுகள், எதிர்பாராத முறைமை செயலிழப்புகள், முக்கியமான நேரடி உற்பத்தி முறைமைகளுக்கான சேதம், அத்துடன் இழப்பு, தரவு மாற்றம் அல்லது வெளிப்படுத்தல் உள்ளிட்டவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத பல்வேறு இடர்நேர்வு சூழ்நிலைகளுக்கான இடர்நேர்வு தணிப்பு உத்தியை விவரிக்கும் அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் இடர்நேர்வு பேணுகைத் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும்.

இ) நடவடிக்கைகளைத் தூண்டுவதைத் தீர்மானிப்பதற்கு நிகழ்வு அதிகரிப்பு நடைமுறைகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கான செயன்முறைகளையும் தலைமைக் குழு நடைமுறைப்படுத்த வேண்டும். இது உண்மையான நிகழ்வொன்றின் போது கட்டாயமாக இருக்கக்கூடியதும் இருப்பினும் ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையின் காரணமாக நிகழும்போது அவசியமற்றதாக காணப்படுகிறது.

ஈ) தலைமைக் குழுவின் கருத்திற்கமைவாக, அத்தகைய நிறுத்தம் தேவை என்று ஏதேனும் சம்பவம் நிகழுமிடத்து, ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையை தற்காலிகமாக அல்லது முழுமையாக நிறுத்துமாறு தலைமைக் குழு உத்தரவிடலாம்.

உ) சாத்தியமான அதிகபட்ச கற்றல் அனுபவத்தைப் பெறுவதற்காக, ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையைப் பற்றிய முன் அறிவைக் கொண்ட ஆட்களின் எண்ணிக்கையை குறைந்தபட்சமாக வைத்திருப்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும். அதற்கமைவாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் ஊழியர்கள் மற்றும் தொடர்புடைய வெளிவாரி தரப்பினரில், ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கை முடிவடையும் வரை யார் அதை அறிவார்கள் என்பதை தலைமைக் குழு தீர்மானித்தல் வேண்டும்.

ஊ) ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கை முழுவதும் பரீட்சிப்பு செய்யப்படுகின்ற தகவல் முறைமைகள் மற்றும் தரவுகளை இனங்காண்பதற்கு குறியீட்டு பெயர்களின் திட்டத்தை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பயன்படுத்துதல் வேண்டும்.

எ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தகவல் முறைமைகளில் ஊடுருவல் பரீட்சிப்புகளை நடத்துவதற்கு போதியளவான தேர்ச்சிகள், தகைமைகள் மற்றும் அனுபவம் வாய்ந்த ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குநர்கள் மாத்திரமே ஈடுபட்டிருப்பதை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும்.

ஏ) ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குநர், ஊடுருவல் பரீட்சிப்பின் போது செயல்படுத்தப்படும் ஏதேனும் படிமுறையின் தளர்வை இயலச்செய்வதற்கான முழு ஊடுருவல் பரீட்சிப்பு நடவடிக்கையின் அனைத்தையுமுள்ளடக்கிய பதிவுகளைப் பேணுவதற்கு தேவைப்படுத்தப்பட வேண்டும்.

ஐ) ஊடுருவல் பரீட்சிப்பில் ஈடுபட்டுள்ள ஊடுருவல் பரீட்சிப்பு பணி வழங்குநரின் ஒவ்வொரு குழு உறுப்பினருடனும் வெளிப்படுத்தாத உடன்படிக்கைகளின் கிடைப்புத்தன்மையை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உறுதிசெய்தல் வேண்டும்.